Australian Volunteers

# சிறுவர்களின் பாதுகாப்பு அனைவரினதும் பொறுப்பாகும்

அவுஸ்திரேலிய தன்னார்வ தொண்டர்கள திட்டம் அனைத்து வகையான தீங்கு மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதில் உறுதியாக உள்ளது




நான் என் குடும்பத்துடன் இருக்கும்போது பாதுகாப்பாக உணர்கிறேன். ஏனென்றால் அவர்கள் என்னை நன்றாக கவனித்துக்கொள்கிறார்கள். *

# என் உரிமைகள்




## சிறுவர்களுக்கு உரிமைகள் உண்டு

உடல், பாலியல் மற்றும் உள துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் என்பவற்றில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு சகல சிறுவர்களுக்கும் உரிமை உண்டு.

எல்லா சிறுவர் களுக்கும் அவர்களின் கருத்து மற்றும் குரல்களை எழுப்ப உரிமை உண்டு. இந்த உரிமைகளும் மற்றும் பிற உரிமைகளும், சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசணத்தில் எழுதப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய தன்னார்வ தொண்டர் திட்டம் சிறுவர்களின் உரிமைகளை நிலைநாட்ட உறுதிபூண்டுள்ளது. இது எங்கள் ஊழியர்கள், எங்கள் கூட்டாளர்கள் மற்றும் எங்கள் தன்னார்வலர்களுடன் நாங்கள் பகிர்ந்து கொள்ளும் பொறுப்புஒன்றாகும்.

## சிறுவர் பாதுகாப்புக்கான எங்கள் அணுகுமுறை

சிறுவர்கள் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் உலகெங்கிலும் உள்ள அனைத்து நாடுகளிலும், வீடு, பாடசாலை, சமூகம் மற்றும் இணையச் சூழல்களில் நிகழலாம்.

அனைத்து வகையான தீங்குகளிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாக்க இந்தத் திட்டம் உறுதியளிக்கிறது. சிறுவர்களை மையமாகக் கொண்ட, உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை நாங்கள் எடுக்கின்றோம்.

எங்களின் சிறுவர்பாதுகாப்புக் கொள்கையின்படி அனைத்து ஊழியர்களும், தன்னார்வத் தொண்டர்களும், கூட்டாளர்களும் சிறுவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாமல், அவர்களின் உயலட நலனுக்காக எப்போதும் செயல்பட வேண்டும்.

சிறுவர் சுரண்டல் மற்றும் தீங்கு விளைவிப்பது தொடர்பாக நாம் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை அணுகுமுறைஒன்றைகொண்டுள்ளோம். அனைத்து நிகழ்வுகள், அக்கறைகள்அல்லது தீங்கு குறித்த குற்றச்சாட்டுகள், அல்லது எங்கள் கொள்கைக்கு இணங்காதது போன்றவற்றுக்கு நாங்கள் எப்போதும் உடனடியாக பதிலளிப்போம், மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக சிறுவர்களின்நலன்களுக்கு முன்னுரிமை வழங்குவோம்.




### எங்கள் கூட்டாளர்களுக்கு நாம் எவ்வாறு ஆதரவு வழங்குகின்றோம்

சிறுவர்களின் பாதுகாப்பு என்பது பகிரப்பட்ட பொறுப்பொன்றாகும்

சிறுவர்பாதுகாப்புக் கொள்கை மற்றும் முறைமைகளை வலுப்படுத்தவும், சிறுவர்களின் பாதுகாப்பை ஆதரிப்பதற்காக தற்போதுள்ள சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளை உருவாக்கவும் நாம் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறோம்.

கூட்டாளர்களுக்கு பின்வரும் ஆதரவு வழங்கப்படுகின்றது:

- சிறுவர்கள் பாதுகாப்புக் கொள்கையை உருவாக்கி செயல்படுத்துவதற்கான ஆதரவு வழங்குதல்
- சிறுவர் பாதுகாப்புக் கொள்கை செயல்நூல் போன்ற நடைமுறை ஆதாரங்கள்
- ஒரு நிகழ்வை எவ்வாறு முறைப்பாடு செய்தல்மற்றும் ரகசிய அறிக்கையிடல் முறை தொடர்பான வழிகாட்டல்கள்
- சிறுவர் பாதுகாப்பு இலக்கு நபர் என அழைக்கப்படும் உங்கள் நாட்டின் பிரதான அலுவலகத்தில் அர்ப்பணிப்புள்ள உள்ளூர் பணியாளர்
- பயிற்சிபட்டறைகள் மற்றும் பயிற்சிக்கான அணுகல்

### ஒரு கேள்வி இருக்கிறதா?

உங்கள் நாட்டின் அலுவலகத்தில் உள்ள உள்ளூர் சிறுவர் பாதுகாப்பு இலக்கு நபரை தொடர்புகொள்ளவும்.

சிறுவர் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் சாசணத்தை (ருஉேசுஊ)இங்கு பார்வையிடவும்: unicef.org./child-rights-convention

சிறுவர் பாதுகாப்பு கொள்கை செயல்நூலை இங்கு பதிவிறக்கம் செய்யவும்: australianvolunteers.com/child-protection

உங்கள் நாட்டு அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் ஒரு நிகழ்வை அல்லது அக்கறையை முறைப்பாடு செய்யவதற்கு: childprotection@australianvolunteers.com

australianvolunteers.com

தொடர்புகளுக்கு: childprotection@australianvolunteers.com

சிறுவர்கள்உரிமைகளுக்கான ஐ.நா சாசணம் பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு: unicef.org./child-rights-convention

*தென் ஆபிரிக்காவின் சேக்ரட் ஹாட் கலாசாலையில் நடாத்தப்பட்ட தீரீசிக்ஸ் அகதி சிறுவர்களுக்கான கல்வி செயற்திட்டத்தின் பயணாளிச் சிறுவர் ஒருவரின் ஆக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உருவப்படம். இந்த திட்டம் ஆரம்ப பாடசாலை வயது அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்த சிறுவர்களுக்கு கல்வியையும்நியாய ஆதரவையும்வழங்குகிறது.

**இவை சிறுவர்களுக்கான சில உரிமைகள் மட்டுமே, இது பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு சிறுவர்கள் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசணத்தை படியுங்கள்.

Australian Volunteers | Australian Aid